# சமூகவியலுக்கும் சமூக மானிடவியலுக்குமான அறிமுகம்

**(INTRODUCTION TO SOCIOLOGY AND SOCIAL ANTHROPOLOGY)**

**BACHELOR OF ARTS (GENERAL)**

**Academic Year – 2014/2015**

**Year – 1, Semester - I**

**M. Riswan**

Published by the

**South Eastern University of Sri Lanka**

The South Eastern University of Sri Lanka

University Park, Oluvil, Sri Lanka

First publication 2016

**ISBN: 978-955-627-083-9**

©2016 South Eastern University of Sri Lanka

All rights reserved. No part of this course book be produced or transmitted in any form or by any means, electric or mechanical, including photocopying and recording or from any information stored in a retrieval system, without permission in writing from both the author of this course book and South Eastern University of Sri Lanka.

## நன்றியுரை

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையமானது வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடவிதனத்துக்குமான பாடநூலினை வெளியிடுகின்ற இந்த புதத்தாக்க மான செயற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இத்தகைய பின்ன ணியில் சமூகவியல் (Sociology) துறைக்கான முதலாம் வருடத்தின், முதலாவது பருவத்துக்கான பாடநூலானது **“சமூகவியலுக்கும் சமூக மானிடவியலுக்குமான அறிமுகம்”** (SOM 11013: Introduction to Sociology and Social Anthropology) எனும் தலைப்பில் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் படுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகைய பாரிய நூல் வெளியீட்டுப் பணியில் என்னையும் இணைத்தமைக்கு இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும், கலை கலாசார பீடத்துக்கும், சமூக விஞ்ஞானங்கள் துறைக்கும் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவுக்கும் அதன் நிருவாகிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக இந்நூலை எழுதுவதற்கு அனுமதித்த துறைத் தலைவர், பீடாதிபதி ஆகியோருக்கும் மற்றும் இணைப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், நூலொன்றை எழுதும் அளவுக்கு என்னை கல்விப் பாதையில் வளர்த்திட்ட எனது தந்தை அலியார் முஹைதீன்பாவாவுக்கும் எனது தாய் உமர் நபீஸாவுக்கும் எனது சகோதரர் எம். றஹீம் அவர்களுக்கும் மற்றும் எப்பொழுதும் உறுதுணையாய் இருக்கும் எனது சகோதரிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலை எழுதுவதற்கும் வடிவமைப்பதற்கும் பக்கபலமாக இருந்து பல்வேறு உதவிகளைச் செய்த எனது மனைவி பாத்திமா நஸீபாவுக்கும் எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தாது என்னை இப்பணியில் அயராது ஈடுபட உதவிய எனது மகள் சானிகா நதீனுக்கும் இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை கணணி அச்சிடுவதில் உதவிய நண்பர்களான முஹம்மட் சுபியான், அஹமட் றஸ்மி, பாத்திமா நுப்லா ஆகியோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இத்தகைய முயற்சி மிகவும் வரவேற்புக்குரிய சமூகப் பணியாகும். நூல் வெளியிடுகின்ற இத்தகைய பணி தொடர வாழ்த்துக்கள்.

நன்றி

**எம். றிஸ்வான்**
B.A (Hons), (SEUSL), M.A (UPDN), Dip. in HRPS (UCBO)
விரிவுரையாளர் - சமூகவியல்
சமூக விஞ்ஞானங்கள் துறை
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்#32360.

## உள்ளடக்கங்கள்

அத். 1: சமூகவியல் மற்றும் சமூக மானிடவியலுக்கான அறிமுகம் 01

அத். 2: சமூகவியல், சமூக மானிடவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்கள் 32

அத். 3: சமூகமயமாதல் 41

அத். 4: பண்பாடும் உறவுமுறையும் 51

அத். 5: அந்தஸ்த்து, வகிபாகம் மற்றும் சமூக உறவுமுறைகள் 61

அத். 6: சமூகக் குழுக்கள் 67

அத். 7: சமூக நிறுவனங்கள் 74

அத். 8: சமூகக் கட்டுப்பாடு 81

அத். 9: சமூக அடுக்கமைவு 86

அத். 10: சமூக மாற்றம் 92

# பாடவிதான அறிமுகம்

| | |
|---|---|
| **பாட தலைப்பு** | : **சமூகவியலுக்கும் சமூக மானிடவியலுக்குமான அறிமுகம்** |
| **பாட குறியீடு** | : **SOM 11013** |
| **வருடம்** | : **01** |
| **பெறுமான புள்ளி** | : **03** |
| **மணித்தியாலங்கள்** | : **45** |

**அறிமுகம் (Introduction):**

இந்த பாடவிதானம் சமூகவியல் மற்றும் மானிடவியல் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்களையும் அணுகுமுறைகளையும் அறிமுகப் படுத்துகின்றது. சமூகம் பற்றிப் புரிந்துகொள்வதிலுள்ள சிக்கல் நிலையினை விஞ்ஞான ரீதியாக விளக்கும் ஒன்றாகவும் இப்பாடவிதானம் அமைந்துள்ளது. சமூக விஞ்ஞானத் துறைகளான பொருளியல், அரசியல் விஞ்ஞானம், உளவியல், சமூகவியல் மற்றும் சமூக மானிடவியல் போன்றன வரையறைகளைத் தாண்டி பல்வேறு சமூகம் சார் துறைகள் பற்றியும் ஆராய்கின்ற வேளையில் சமூகவியலும் மானிடவியலும் சமூக உலகு பற்றிய பொதுவான விளக்கங்களை கொண்ட துறைகளாக ஒருமித்து நிற்கின்றன. இவை இரண்டு துறைகளும் சமூகம்சார் அனைத்து விடயங்களையும் விபரிப்பதாய் உள்ளன. சமூகவிலும் மானிடவியலும் 19ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருப்பினும் ஆரம்ப காலங்களில் மேலைத்தேய நாடுகளை மையம்கொண்டதாய் உருவாகின. பிற்பட்ட காலங்களில் இவ்விரு துறைகளும் மேலைத்தேயம் அல்லாத ஏனைய சமூகங்கள் பற்றி ஆராய்கின்ற சிறப்புத் துறையாக பரிணமித்துள்ளன. பல ஆண்டு காலமாக சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆகிய இவ்விரு கற்கைகளும் துறைசார் அடிப்படையில் ஒருமித்த தன்மையைக் கொண்டு காணப்படுவதுடன் பொதுவான அணுகுமுறைகளையும் கொண்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பாடவிதா

னத்தை முதலாம் வருடத்தின் முதலாவது பருவத்தில் ஒரு பிரதான பாடமாகக் கற்கமுடியும்.

**குறிக்கோள் (Aim):**

இப்பாடவிதானம் சமூகவியல் மற்றும் சமூக மானிடவியல் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்களையும் அணுகுமுறைகளையும் அறிமுகப் படுத்துவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. இக்கற்கை சமூகவியல், சமூகக் கட்டமைப்பு, சமூக குழுக்கள், சமூக நிறுவனங்கள் பற்றிய அடிப்படை அறிவினையும் வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

**கற்றல் பெறுபேறு: (Learning Outcome):**

இப்பாடவிதானத்தின் இறுதியில், சமூகவியலும் மானிடவியலும் எவ்வாறு சமூகத்தை பற்றியும், ஒவ்வொரு காலப்பகுதியிலும் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் நோக்கியுள்ளன என்பதனை மாணவர்கள் தெளிவாக புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் மாணவர்கள் சமூக யதார்த்தத்தினை விஞ்ஞான பூர்வமாகவும் குறித்த நோக்குடனும் அணுகுவதற்கும் இயலுமாக இருக்கும். அத்துடன் எந்த இனமையவாதமற்ற மனப்பாங்குடன் தான் சார்ந்த சமூகத்தையும் ஏனையவர்களின் சமூகத்தையும் நடுநிலையாக நின்று மாணவர்கள் புரிந்துகொள்ள ஏதுவாக அமையும்.

**கற்றல், கற்பித்தல் முறை (Teaching & Learning Method):**

இப்பாடவிதானத்தை போதிப்பதற்குரிய கற்றல், கற்பித்தல் முறைகள் பின்வரும் அடிப்படையில் அமைந்திருக்கும்.

**க.க: 1** விரிவுரைகள் (Lectures)

**க.க: 2** சிறு குழுக் கலந்துரையாடல் (Small Group Discussion)

**க.க: 3** சமர்ப்பித்தல் (Presentation)

**க.க: 4** விடய ஆய்வு (Case Study)

**க.க: 5** சிற்றாய்வு (Mini Research)

**மதிப்பீட்டு முறை (Method of Evaluation):**

மாணவர்கள் பருவ-இறுதி எழுத்துப் பரீட்சை (Semester-end Written Exam) மூலமாகவும் தொடர்ச்சியான கணப்பீடுகள் (Continuous Assessment) மூலமாகவும் மதிப்பீடு செய்யப்படுவர்.

| | |
|---|---|
| பருவ-இறுதி எழுத்துப் பரீட்சை | - 70 புள்ளிகள் |
| தொடர் கணிப்பீடுகள் | - 30 புள்ளிகள் |
| **மொத்தம்** | **- 100 புள்ளிகள்** |

**தொடர் கணப்பீட்டு முறை (Method of Assessment):**

பின்வரும் அடிப்படையில் தொடர் கணிப்பீடுகள் அமைந்திருக்கும்

**க. 1** வகுப்பறை பயிற்சி/கருத்தரங்குப் பரீட்சை (Tutorial/Seminar Test)

**க. 2** ஒப்படை (Assignment)



View publication stats